1990 மே, 2]

கூட்டுறவில் சேராத நெசவாளர்களுக்கு உதவும் திட்டம்.

*1149 திரு. ஜி. ஜி. குருமூர்த்தி : மாண்புமிகு கைத்தறிமற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கூட்டுறவில் சேராத நெசவாளர்களுக்கு உதவும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : பேரவைத் தலைவரவர் களே,

(அ) ஆம்.

(ஆ) கூட்டுறவில் சேராத கைத்தறி நெசவாளர்களுக்கு, கைத்தறித் தொழிலுக்குத் தேவையான மூலப்பொருளான நூல் சலுகை விலையில் வழங்கப்படுகிறது. இணைந்த ஓய்வு உதவிச் சிறப்புத் திட்டத்தின் மூலம் தனியார் நெசவாளர்களுக்கு ஈட்டுறுதி பெற வாய்ப்புள்ளது. மேலும் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தில் உறுப்பினர்களாகச் சேரும் பட்சத்தில் கைத்தறித் தொழிலுக்குத் தேவையான கடன் உதவி பெறலாம்.

10-00 மணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி யுடன் வினாக்கள்-விடைகள் நேரம் சிறிது நீட்டிக்கப் பெறுகிறது.

திரு. ஜி. ஜி. குருமூர்த்தி : தலைவர் அவர்களே, கூட்டுறவு அமைப்பில் சேராத நெசவாளர்களைப் பூரணமாக கூட்டுறவு அமைப்பில் சேர்ப்பதற்கு ஏதாவது திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : தலைவர் அவர்களே, தனியார் கைத்தறியாளர்களை கூட்டுறவு அமைப்பில் கொண்டு வருவதுதான் இந்த அரசின் கொள்கை. ஆண்டிற்கு 15,000 கைத்தறி நெசவாளர்களைக் கூட்டுறவு அமைப்பிற்குள் கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. ஜி. குருமூர்த்தி : தலைவர் அவர்களே, நூல் விலை ஒரு நிதானத்தில் இல்லாமல் ஒவ்வொரு வாரமும் ஒரு விலையாக அதிகமாகக் கூடிக்கொண்டு வருகிறது. நூல் விலையைக் குறைப்ப தற்கு அரசு ஏதாவது நடவடிக்கையெடுக்க உத்தேசித்து இருக் கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : தலைவர் அவர்களே, நூல் விலை ஏற்றத்திற்கு மிக முக்கியமான காரணமான பருத்தி மற்றும் நூல் ஏற்றுமதியைத் தடை செய்ய மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்தி வருகிறது. மேலும் பருத்தி கொள்முதலில் லெவி முறையை அமல்படுத்த மத்திய அரசு மாநில அரசுக்கு அதிகாரம் வழங்க வேண்டுமென்றும் அரசு கோரியுள்ளது. மேலும் தனியார் ஆலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு, மாநில அரசின் மூலம் செய்வதற்கு எந்த அதிகாரமும் இல்லை. இதற்கு மத்திய அரசைத் தொடர்ந்து நாங்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். தனியார் ஆலைகள் கைத்தறிக்குத் தேவையான 50சத வீதம் சிட்ட நூலைத்தான் உற்பத்தி செய்ய வேண்டுமென்று இலக்கு இருக்கிறது. அதை அமல்படுத்த வேண்டுமென்று தொடர்ந்து மத்திய அரசை இந்த அரசின் மூலம் வேண்டிக் கொண்டிருக்கிறோம். மேலும், நூலை அத்தியாவசியப் பொருளாக, 'எசன்ஷியல் கமாடிட்டி ஆக்ட்'-டில் கொண்டு வந்தால் நிச்சயமாக நூல் விலையைக் குறைக்க முடியும் என்ற கருத்தையும் மத்திய அரசிற்கு மாநில அரசு கூறியுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : வினாக்கள் - விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

உறுப்பினர் திரு. குமரி அனந்தன் 29-4-1990 ஆம் நாளன்று சென்னையில் ஒரு விழாவில் கலந்து கொண்டபோது சிலர் தாக்க முயன்றுள்ளதால் அவருக்குப் பாதுகாப்புத் தரவேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. ஆர். சிங்காரம் : தலைவர் அவர்களே, நம்முடைய காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர், இலக்கியச் செல்வர், இலக்கியப் பேரவையை வருடா வருடம் சென்னையில் நடத்தி வருகிறார். திரு. குமரி அனந்தன் அவர்கள் தி.நகரில் நடத்திய விழா நடந்து கொண்டிருந்த போது —இந்த விழாவை குமரி அனந்தன் அவர்கள் தான் நடத்துகிறார் என்பது உங்களுக்குத் தெரியும்— 29-4-1990-ம் நாளன்று மாலை 6-45 மணிக்குக் கருப்புச் சட்டை அணிந்த 4, 5 நண்பர்கள் விழாவிற்கு வந்தார்கள். அவர்கள் நடமாட்டம் சந்தேகத்தை வலுப்படுத்தியது. இந்த கருப்புச் சட்டைக்காரர்கள் திரு. குமரி அனந்தன் எங்கெல்லாம் போகிறாரோ அங்கெல்லாம் அவர்களும் கூடவே போனார்கள். விழாக் குழுவைச் சேர்ந்தவர்கள் அவர்களை சற்று சந்தேகக்